# அன்னநாச்சி அருள்மஞ்சரி



JPL
C1281

ச.வே.பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

சிவமயம்

# அன்னை நாச்சி
# அருள் மஞ்சரி

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



KOHA
JPL
83488

பாடியவர்:

**பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்**

வெளியீடு:

**இளந்தொண்டர் சபை**
இணுவில் கந்தசுவாமி கோவில்,
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சேர்வு எண் | |
| வகுப்பெண் | 294.54 பஞ்சா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

அம்பாள் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் மடாலயத்தினை நிலைக்களமாகக் கொண்டு 15 வருட காலமாக சைவஉலகின் ஆன்மீக வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளிலும் உழைத்துவரும் எமது சபை அன்னை பராசக்தியின் அடித்தொண்டுகளாக நவராத்திரி விழாக்கள், விஜயதசமி விழாக்கள். சங்கீத, மிருதங்க, பண்ணிசை, வயலின் வகுப்புகள் கூட்டுப்பிரார்த்தனைகளை நடாத்துவதோடு ஆண்டு தோறும் 'சகல கலாவல்லி மாலை, என்னும் நூலை அச்சிட்டு இலவசமாக விநியோகஞ் செய்தும் வருகிறது.

இந்த வரிசையில் இணுவில் பாப்பா தோட்டம் சிவநாச்சியார், வட்டுவினி கண்ணகி நாச்சியார் ஆலயங்களில் வீற்றிருந்து அருள்மழை பொழியும் அம்பாள் அருள் நறுந்தேனுண்டும் தேனர் அவாவியும் பாடப்பெற்ற பண்டிதர்ச.வே.ப. வின் **'அன்னை நாச்சி அருள்மஞ்சரி'** பாராயண நூலினை அச்சிட்டு வெளியிடவும் அம்பாள் அருள் பாலித்துள்ளது எமது பெரும் பேறுகும்.

ஏற்கனவே எமது சபையால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலாசிரியரின்' **இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்' 'செகராசப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ்'** நூல்கள் போன்று இப் பக்திப் பனுவல் நூலும் இறையடி மூழ்கும் இதயங்களுக்கு இனிய விருந்தாகும் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்

**இளந் தொண்டர் சபையினர்**
இணுவில் கந்தசுவாமி கோவில்

இணுவில்
9-10-89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## கவிஞர் ச. வே. பஞ்சாட்சரப் பண்டிதரின்
## சிவநாச்சி அம்பாள் திருப்பதிகம்
## கண்ணகிநாச்சி விண்ணப்ப வெண்பா

# சால்புக்கவின் சாற்றுகவி

''இந்துசாதனம்'' ஆசிரியர், வழக்கறிஞர், சைவபூஷணம்,
சைவசமய சிகாமணி

## திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் வழங்கியது

### எண்சீர் விருத்தம்

கலைமகளைச் சிவநாச்சி அம்பாள் காட்சிக்
    கருணையினுல் உருதிருவாய்க் கண்ட கவிஞன்
சிலைமகுட இணையூரிற் செய்யாள் மாட்சி
    திகழுழவர் புகழெழவாழ் பண்டை மரபின்
நிலைமருவு நலமேவு முன்னோர் நீர்மை
    நெறிமதியாற் புலமையுளான்! கந்தன் நியதி
அலைமலிசெந் தமிழோது பிள்ளை யாப்பில்
    அழகொழுகோர் பதிகமுறை செய்யும் அறிஞன்.

மந்திரத்து நமசிவய பஞ்சாட் சரமாய்
    மகிதலத்திற் புலவனென வாக்குப் பெற்றேன்
சந்திரத்தி லகமெனச்சொற் சிந்தா மணியாய்த்
    தமிழவைக்கண் தகைமையுயர் நோக்கு முற்றேன்
சிந்திரட்டை மணிவிரவு வெண்பா கலிமாண்
    தெளிவிருத்தம் மழலையெழில் தேர்ந்தே சொற்றேன்
செந்திணைக்கண் கனிநனிநன் கொன்றுய்த் தெவிட்டாச்
    செழுமைதிகழ் சிவ்நினைவால் யாக்கக் கற்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

இலக்கியம் தேர்வோரின் இன்னல் அறிந்தாங்
கெழுமையந் திரிபற இயல்நூல் தண்ணூர்
இலக்கணப் பூங்காவும் மன்ன இணைத்தோன்
எழுத்தைமெய் யுணரவ மைத்தோன்! விண்ணோர்
நலக்கலை யாமேழாங்கும் இந்து நவச்சீர்
நவிலுசற் கழகஅ வைக்கோர் கண்ணுய்த்
துலக்கியல் ஆசான்! பொன் அன்ன அகத்தோன்
தொழுதெழுஞ் சமயிசெம் மைக்கே தொண்டோன்!

### எழுசீர் விருத்தம்

### வேறு

திருப்பதிகம் சிவநாச்சி அம்பாட் கமுதாய்ச்
செழுந்தமிழ் நிவேதனம் தேவி
விருப்பமெழத் தனதாக்கிக் கொள்வாள்! வெகுநாள்
விளங்குயர்வித் யாவளம் நாவில்
இருப்பவள் கலையாச்சி நெய்நீள் விளக்காள்
இணுவையர்த போவனம் மேவிப்
பொருப்பினெழில் மொழியாட்சி இந்நாட் டவர்க்கே
பொருந்தவைப்பள் பூர்வீகம் போலே!

### வெண்பா

பண்டிதன் மாகவிஞன் பஞ்சாட்ச ரப்பேர்நன்
குண்டிதன் சீருரைக்கில் ஓம்எழுமெய் - கண்டிதங்
கற்றுத் தகநின்று கண்ணுதலை நண்ணுசத்தி
உற்றுத் தமிழ்சொல் லுதல்.

இங்ஙனம்

இரசிகன்— **நம. சிவப்பிரகாசம்**—'இறைஒளி'
மல்லாகம்.

உ

சிவமயம்

# முகவுரை

தாய்ப்பசு தன்னுதிரத்தில் உதித்து, தன்னுதிரப்பாலில் வளரும் சேய்ப்பசுங் கன்றுக்கு - அது தன்மடியைப் பாச உரிமையுடன் மோத மோத, இரங்கி இரங்கிப் பால்சுரந் தூட்டி வாழ்விக்கிறது.

சர்வலோக மாதா, சகல உயிர்களுக்கும் தாய் - அன்னை பராசக்தி அருளில் உதித்து, அருளில் வளர்ந்து, அருளில் வாழும் அடியேனை விதிவசமாக இன்று வதைக்கும் துன்பங்களைத் தீர்க்கும்படி அழுதழுது அன்புரிமையோடு அவள் திருவடிகளுக்கு உணர்ச்சிகளால் மோதிமோதி எழும் பாடல்களால் விண்ணப்பிக்கின்றேன். அடியேனுக்கு இரங்கி அம்பாள் திருவுள்ளம் நிச்சயம் அருளைச்சுரக்கும் அல்லல் துடைக்கும். இது என் கடந்தகால அநுபவம்தந்த நம்பிக்கை.

உணர்ச்சிமயமான இந்தப் பக்திக் கவிதைகள் உண்மையில் பயன் தருகின்ற வழிபாட்டுநெறியை இன்றைய சைவ மக்களுக்கு நிச்சயமாக இனங்காட்டும் என்பதால் இவை அவசியமாக நூல்உருவில் வந்து பரப்பப்பட வேண்டுமென்று ஆசிரியர், பண்டிதர், சைவப்புலவர் வே. சண்முகலிங்கம் ஆசிரியர் திரு. ந. தங்கவேல் முதலியோர் பெரிதும் விரும்பினர். இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபையினர் இக்கைங்கரியத்தினை நிறைவேற்ற முன்னின்றனர். நூறுண்டுச் சேவை "இந்துசாதனம்" ஆசிரியராம் சைவத் தமிழ் முனிவர் சாற்றுகவி தந்து ஆசீர்வதித்தனர். அனைவருக்கும் எனது பணிவான நன்றிகள்.

வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா அச்சகத்தினர் அம்பாளின் இவ்வரும்பாக்களை அச்சிடும் பொருத்தப்பாடும் எண்ணி மகிழ்தற்குரியது.

அம்பாள் உள்நின்று இடித்தும் வெளிநின்று தூண்டியும் உதித்த இக் கவிதைகள் ஓதுந்தோறும் ஓதுவார்க்கும் பிணி நீக்கம் - சிறைநீக்கம் - மிடிமை நீக்கம் பெற்றுக்கொடுக்கும் என்பது எமது நம்பிக்கை.

அன்பன்

ஆசிரியர் — ச. வே. பஞ்சாட்சரம்

யாழ். இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவணபவகுக

# சிவநாச்சி அம்பாள் திருப்பதிகம்

## விநாயகர் காப்பு

முருகன் கோபுர வாசலிலே
முதிரும் இலுப்பை மரநிழலில்
பரிவார் வைத்தியர் ஒருவர்மனைப்
படலை தன்னில் பகலிரவாய்
வருவாள்! தண்ணீர் தா!விளக்கு
வை!என் றழைத்து மறைந்திடுவாள்
ஒருவீ டிங்ஙன் ஆலயமாய்
உயர்த்திப் புகுந்தாள் சிவநாச்சி!

ஒருபுறம் முருகன் வைரவன்மால்
ஒருபுறம் ஓம்திகழ் துதிக்கையன்
மருவிட வதியுஞ் சிவநாச்சி
மகவுயிர் காத்தென் குடிகாத்தாள்
உருகிட நெஞ்சம் அழுதழுதே
உத்தமி அவளைப் பாடிடுவேன்
கரிமுகத் தையா துணைபுரிவாய்
காத்தவள் மகிழுங் கவிதருவாய்.

ச. வே. ப.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

தெள்ளுதமிழ்க் கலையினுவைச்
சிவநாச்சி அம்பாளே!
பிள்ளைகெடப் பிழைபொறுக்கும்
பேதைத்தாய் மண்ணுலகில்
பிள்ளைபிழை தனைச்சீறிப்
பிழைதிருத்தும் பெருந்தாய்நீ!
எள்ளிருக்க இடமின்றி
என்னெஞ்சில் நிறைந்தருள்வாய்!

வருத்தமுடன் வருங்குழந்தை
மாறிடநோய் போம்விதமாய்
மருத்துவரில் நின்றருள்செய்
மாதாவே! சிவநாச்சீ!
இருத்தியெனில் என்னெஞ்சுள்
என்மலங்கள் தேய்ந்தொழியும்!
பெருக்கெழுமே ஆனந்தம்!
பிறப்பினியும் இலையாகும்!

பிரபஞ்சம் தந்தவளே!
பிரபஞ்ச அற்புதமாய்
வருமிந்த ஊனுடலம்
மலங்கழுவ உயிரெம்மை
கருமங்கள் தமிலூக்கக்
களைத்தோமே! நீநெஞ்சுள்
இருவந்தெம் சிவநாச்சீ!
எம்ஆன்மா சுத்தமுறும்!

செம்பவளச் சிற்றடிகள்!
சிற்றுடை மென்மருங்கு!
நம்பபயம் எனவருளி
நறுங்கன்னல் ஏந்திநிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புயச்செவ் வளைக்கரங்கள்
அருள்சுரக்கும் பெருவிழிகள்!
அம்பிகையே சிவநாச்சீ!
அப்படியே நில் நஞ்சில்!

திருமுருகன் நேர்த்திக்காய்ச்
செய்விளக்கு நூற்றெட்டோ
டொருவிளக்கும் வந்ததனுல்
உவந்ததனை நீயாக்கி
உருவேற்றிப் பூசைசெய
உற்பத்தி யானவளே!
இருளெனக்குள் எந்நொடியும்
என்கதியே சிவநாச்சீ!

சிங்கத்தில் ஆர்ந்தவளே!
சிவநாச்சி அம்பாளே!
எங்கெங்கே சென்ருலும்
என்னென்ன செய்தாலும்
அங்கெல்லாம் உள்நின்றே
ஆள்களனை உன்வடிவே!
எங்கெதுவும் நீயாக
என்கண்ணில் பட்டருள்வாய்!

நயினைநகர் எழுந்தருளி
நாகம்மா ளோடருளின்
மயவடிவம் வார்ப்புற்று
வந்திணுவை அமர்ந்தவளே!
கயிலைமலை நாதருடன்
கால்நொடியும் மறையாமல்
துயில்பொழுதுங் காட்சிதந்து
சுடர்செய்வாய் என்னெஞ்சில்!



83488

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுக்குள் நீநிற்க
  என்சிந்தை செயல்பேச்சு
பொன்னுக்குச் சமமாகும்!
  புனிதமுறும்! அவ்வேளை
முன்னைத்தொல் வினைபிழைகள்
  மும்மலமும் தேய்ந்திடுமே!
அன்னைச்செஞ் சிவநாச்சீ!
  ஆர்வேறென் அடைக்கலமே?

உலகத்து மலர்களெலாம்
  மணக்கின்ற உன்னடிகள்
உலகத்தின் இருளையெலாம்
  ஓட்டும்உன் ஒளிவடிவம்
உலகத்தின் துயரையெலாம்
  துடைத்தருளும் உன்கைகள்
நிலவுமெனில் என்நரக
  நெஞ்சமுமே சொர்க்கமடீ!

சேய்க்காக மருந்துண்பாள்
  தின்னுமல் கிடந்திடுவாள்
நோய்த்தால்நான் உயிர்விடுவாள்
  நூறூத்தை பொறுத்திடுவாள்
தாய்த்தெய்வம் தாரணியில்!
  தாய்க்குந்தாய் ஆனவள்நீ!
ஏய்க்குவையோ சிவநாச்சீ?
  என்னுள்நில் எக்கணமும்!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவணபவகுக

இணுவில் - மேற்கு வட்டுவினி,

## கண்ணகி நாச்சி

# விண்ணப்ப வெண்பா

### விநாயக வணக்கம்

திங்கள் பலவாய்வெஞ்
சிறையினிலே வாடும்
எங்கள் இளஞ்சேய்
இன்னற் சிறைநீக்கக்
கஞ்ச மலர்த்தாளி
கண்ணகியாம் அன்னைக்கே
செஞ்சொற் கவிதையிலே
செய்யவொரு விண்ணப்பம்
சிந்தையிலே வந்தருளச்
செல்லக் கணபதியை
வந்தித்தேன்! தந்தான் வரம்!

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

ச. வே. ப.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

மாற்கரிய தங்கையே!
வட்டுவினிக் கண்ணகியே!
நாற்குணத்து நம்பியரின் நங்கையரின்
மேற்கிணுவைத்
தாய்க்குந்தாய் ஆனவளே!
தஞ்சம் இளஞ்சேயைத்
தீய்க்குஞ் சிறைதீர்த் திடு!

பரிந்தருள்வாய் வட்டுவினிப்
பத்தினியே! தாயே!
விரைந்தெங்கள் வெந்துயரை வீழ்த்து!
கரும்பென்றே
கல்லைக் கடிக்கும்
கபோதிப் பிறப்பாசை
இல்லையினி! மீள்பிஞ்ச டீ!

ஓரிடத்தில் குந்தி
ஒருசீவன் ஏங்கியழ
ஊருலகம் ஓடியலைந் தொன்றேங்க
பாரடியோ
நாங்கள் படும்அவலம்!
நம்விதியே மாருதோ?
தீங்குயிற்குத் தீர்ப்பாய் சிறை!

வேதா கமமொலிப்ப
வீற்றிருக்குங் கண்ணகியே!
பூதமெனப் புத்திரசோ கம்வருத்த
சாதமுழவும்
ஏழையெமைக் காக்க
இளஞ்சேய் சிறைநீக்க
வாழி! தா இன்றே வரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யேன் ஒருபாவம்!
    தீண்டேன் ஒருபழியும்!
'துய்யவரைக் காப்பாய் தொழ' என்னல்
    பொய்யோ?
விரைந்துன் கரத்தால்
    விடுவிப்பாய் பூட்டு.
கரைந்தபூமென் பிள்ளைக் கனி!

சங்கரித்தாய்! சூர்மகிடற்
    சங்கரித்தாய்! பட்டருக்கும்
அங்களித்தாய் கீர்த்தி! அழுகின்றோர்
    எங்கிருப்பார்
அங்கிருப்பாய்! ஆற்றிடுவாய்!
    மைந்தன் சிறைநீக்கி
எங்களையும் ஆற்றாய்இன் றே!

காத்தான் கணபதியான்
    காத்தான் வயிரவனும்!
காத்தான் கடம்பன்; சிவநாச்சி
    ஆத்தாளுந்
காத்தாள்! சிறைமீட்கக்
    கண்ணகியே வாராயோ!
பூத்தாளில் நல்கு புகல்!

உன்னை நினைத்தே
    உயிர்வாழ உன்நினைவால்
முன்னைப் பழவினைகள் மூழ்கடிக்க
    முன்னைப்
பழவினைகள் பாற்றிப்
    பவமறுக்க வந்தேன்!
இளகிமனம் பார்கண்ண கீ!

KOHA
DPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விதியிருந்தால் மீள்வேன்நான்
வீடெ'ன்றென் செல்வம்
கதிகலங்கிச் சொன்னகனல் வார்த்தை
இதயம்
தனைக்கருக்கும்! என்னைநான்
சாகடிக்கா முன்என்
தனயனைஎன் கைகளிலே தா!

எதுநீதி என்றுரைக்க
யாரறிவான் இன்று?
மதிகெட்டென் மைந்தன்மாட் டுண்டு
கதிகெட்டுத்
தாழ்ந்து தளர்கின்றான்!
தாயேநம் கண்ணகியே
வாழ்ந்தோங்க வெட்டாய் வலை!

விழுந்து விழுந்தெழும்பி
மீட்சிக்காம் போரில்
அழுந்துங் குடும்ப அவலம்
விளங்காமல்
ஊருக் குதவப்போய்
உற்றான் சிறை! தாயே!
ஈரநெஞ்சீ! நொந்தான் எடு!

''ஆண்டவனே தேர்வான்
அருள்வான் அசல்நீதி!
வேண்டவனை!'' என்றேன்அவ் வேதமொழி
தாண்டியவன்
ஆயுதத்தை நம்பும்
அவலத்தோர் சூழ்நிலையால்
போயசிறை நீங்கப் புகல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரங்கள் சற்றும்
அறியாதான்! தந்தையுரை
மந்திரமென் றெண்ண மறந்ததனுல்
சுந்தரியே!
தன்னந் தனியாய்த்
தகிக்குஞ் சிறைக்குள்ளே
இன்னலுறு கின்ருன்! இரங்கு!

வஞ்சகர்கள் வாலுருவ
மாட்டுண்டு வெஞ்சிறையில்
பஞ்சுவெள்ளைப் பால்மனத்தென் பாலகனே
அஞ்சியஞ்சி
வாடுகிருன் ஆகொடியேன்!
மாதா மனமிரங்கி
ஓடவனை மீட்பாய் உடன்!

அன்னை அரவணைப்பில்
அப்பன் அருட்பரிவில்
வன்ன மலர்வனத்து வண்டாக
தன்னை
மறந்தாடி ஆனந்தம்
மாந்துவய தன்ருே?
திறந்துவிடு தாயே சிறை!

பிள்ளை பிழைபொறுத்தேன்!
பிள்ளைகள் நாமுனக்காய்
உள்ளவளே கண்ணகியே உத்தமியே
தள்ளாடிச்
சோர்ந்து தளர்கின்ருேம்!
துன்பம் துடைத்தருளித்
தீர்ந்திடவை மைந்தன் சிறை!



83488

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றமனம் பித்து!
    பிழைக்கவில்லை என்மட்டில்!
பெற்றவளே உன்னில் பிழைத்ததுவோ?
    முற்றுலகும்
முத்திபெறக் காக்கும்
    முதல்வீ! அருட்கடலே!
பத்தினியே தீர்ப்பாய் பழி!

குங்குமமாய் நிற்பாய்
    குலமகளிர் நெற்றியிலே!
சங்கமமாய் நிற்பாய் தலைசால்பில்!
    இங்கெனக்கும்
நெஞ்சப் புனிதம்
    நிறைத்தவளே! கண்ணகியே!
வெஞ்சிறையைத் தீர்க்க விரை!

என்னால் எவர்க்கும்
    இடர்சேரா மல்வாழ்ந்தேன்?
என்னால் எனக்கின்னல் எய்திடவே
    துன்னியெழும்
இச்சை துடைக்கா
    இழுக்கால் அழிந்தேன்! என்
பச்சைச் சிசுபால் பரி!

வெள்ளை மனத்தர்
    வெளிவாயர் சிக்கலுறும்
முள்ளின் மயமாம் முனியுலகில்
    பிள்ளைவரம்
கேட்ட பெரும்பிழைக்குக்
    கிட்டியதித் தண்டனையோ?
பூட்டுசிறை மீளப் புரி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு

வரங்கேட்டேன் என்று
வரம்வந்த பிள்ளை
இருஞ்சிறையில் இன்னல் உறுங்கால்
வரங்கேட்டேன்
''மீண்டாண் டருள்'' என்று!
வேண்டுவரம் நல்காமல்
ஈண்டுமட்டும் கல்லானாய் ஏன்?

உருண்டும் பிரதட்டை
ஊரார் பரிந்து
திரண்டும் விழிநீரின் தேக்கம்
வரண்டும்
பயனில்லை! சிந்துரத்தாட்
பத்தினியே உன்றன்
தயவேசெய் மீட்சி தரும்!

நவராத்திரித் தேவி!
நம்பன் வலுவே!
நவக்கிரகம் ஏத்துமொரு நங்காய்!
பவத்துயரின்
உச்சி நுகர்ந்தின்றே
ஓவென் றலறுகின்றோம்!
அச்சமற மீட்பாய் அவன்!

பிறப்பே ஒருசிறை! அப்
பேய்ச்சிறைக்குள் பாசச்
செறிப்போர் சிறை! அச் சிறைக்குள்
வறுக்கப்
படுகின்ற வண்டென்னைப்
பத்தினியே பாய்ந்து
விடுப்பி! சேய் வெஞ்சிறையின் மீள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுய் உயிரைப்
புடம்போடத் துன்பங்கள்
அன்னுய்! அளித்தாய் அருள்வாழி;
என்னுல்
இனித்தாங்க ஏலாது!
தாயே மகன்சிறையின்
தனித்துன்பம் இன்றே தவிர்!

கரும்புன்றன் கையில்!
கசங்கில்தான் சாறு!
விரும்பிச் சுரக்காது! மெய்யே!
வருந்தும்
துயர்தந்தால் மட்டும்
துதிபாடு வேன்! ஆம்!
அயர்சேயை மீட்பாய்அம் மா!

பறக்கின்றேன் பட்டப்
பகலெல்லாம்! தூக்கம்
மறக்கின்றேன்! வாழ்வே நெருப்பில்!
இறக்கின்றேன்
அன்றுடம்! நெஞ்சாற
அம்மா அருள்செய்வாய்.
சென்றுதிற என்சேய் சிறை!

உலகையெலாங் காக்கும்
ஒருசக்தி உன்முன்
அல்லவதுவோ நானுன் அடியான்?
பலபிறவிப்
பாவமெலாம் சேர்ந்து
படையெடுத்துத் தாக்குபவோ?
தேவிதிற என்சேய் சிறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபங்கள் செய்தேன்?
　　பரிந்து பொறுத்தருள்வாய்!
கோபந் தணிந்து குளிர்ந்தருள்வாய்!
　　சாபங்கள்
ஏதேனும் உண்டேல்
　　இரங்கி அவைமாற்றி
மாதாவே மீளென் மகன்!

பிஞ்சுப் பராயத்தென்
　　பிள்ளை அரசியலாம்
நஞ்சேறி நாகச் சிறைசென்று
　　நெஞ்சழிதல்
எண்ணியெண்ணிச் சாகவைத்த
　　என்பழிகள் மன்னித்துக்
கண்ணகியே என்மகனைக் கா!

அன்புத்தாய் தந்தை
　　அரிய உடன்பிறந்தோர்
'என்செய்தோம் பாவம்?' எனஏங்க
　　தன்பிஞ்சு
மேனி வெதும்பிச்
　　சிறைவேகும் என்மகற்கு
நானுயிர்க்கச் சேர்ப்பாய் நலம்!

புத்திர சோகம்போல்
　　பொல்லாத சோகமில்லை
பத்தினியே நன்றாகப் பட்டறிந்தேன்!
　　சுத்தமனம்
சுத்தநடை சத்தியமாய்ச்
　　சோதிக்கேல் காக்கின்றேன்!
புத்திரனை மீள்ஓடிப் போய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடுவது பிச்சி, பிறை
சூடிக்குப் பிச்சி! பதம்
கூடுவது கச்சியெனக் கொண்டனை! செங்
கோடனுக்கும்
அன்னாய்! ஓர் அச்சுதனின்
தங்காய்! நீ பாசமென்றால்
இன்னதெனத் தேர்வாய்! எழு!

பச்சை இளங்கொழுந்து
பாழுஞ் சிறைநீங்கி
அச்சம் அகன்றுன் அடிதொழவே
பிச்சிமலர்
சூடிப் பொலிந்து
சுடர்கின்ற கண்ணகியே
தேடித் திறப்பாய் சிறை!

பத்திர காளீ!
பரிந்தருள்வாய் என்பிள்ளை
பத்திரமாய் மீளும் படியென்றே
எத்தனைநாள்
வேண்டி அழுகின்றேன்?
வித்தகியே! கண்ணகியே!
மீண்டருள்வாய்! தீர்ப்பாய் வினை!

நூறு கொடும்நீதி
நோயாய்ப் பெருகிநின்று
நாறுமொரு நாட்டில் நலிகின்றோம்!
வேறுகதி
இல்லை உனைவிட்டால்!
என்சேய் சிறைமீட்பாய்,
சொல்லிஇசைக்கின்றேன் துதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குங்குமத் தாயே
குளிர்ந்தருள் என்றேத்தும்
எங்குரலேன் காதில் இறங்கவில்லை?
சங்கரியே!
மன்னிக்கும் பண்பே
வடிவான நீவிட்டால்
என்மகனை மீட்பார் எவர்?

சுட்டி புரத்தில்
சுகமாய் உறைவதிலோ
மட்டுவில் வாழ்வில் மகிழ்ந்ததிலோ
வட்டுவினி
வாராது விட்டாய்?
வருந்தடியார் மீட்சிபெறத்
தீராது விட்டாய் சிறை!

பிச்சையிடு கண்ணகியே!
பிச்சையிடு! பிள்ளையுயிர்ப்
பிச்சையிடு! பேரருளே பிச்சையிடு!
உச்சிமிசை
உன்னடிகள் தாங்கியுயிர்
உள்ளவரை ஏத்திடுவேன்!
துன்னுசிறைத் துன்பம் துடை!

சேய்க்கு வரும்நோய்க்குத்
தின்றால் மருந்தைத்தாய்
சேய்க்கதனுற் காப்பு! சிறியேனும்
நாய்க்குரிய
தண்டனைகள் பண்பார்
தனயனவன் தாங்கினனே!
சண்டிகா!என் சற்குருவைத் தா!

83488



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றன்பின் ஒன்ருய்
உருத்துவந்த சோதனைகள்
இன்றென் னுயிர்க்கே எமனுகி
"கொன்றிடுவோம்
ஓடிப்பார்!" என்கிறவே
உத்தமி! நான் சாகாமுன்
தேடித்தீர் செல்வன் சிறை!

பண்பட்ட போக்கு!
பலரின் விஷப்பார்வைக்
கண்பட்ட கீர்த்தி! கவின்தோற்றம்!
புண்படவே
புத்திரனின் பூமேனி
பொல்லாச் சிறைவருத்தல்
பத்தினியே தீர்ப்பாய் பரிந்து!

"விலையென் னுயிரைத்தான்
வேண்டினும் வாங்கித்
தலையிடியும் தாக்காதென் மக்கள்
நலங்காப்பாய்"
என்றுன்தாள் ஏத்திவந்தேன்!
ஆனுலும் என்பிள்ளை
சென்ருனே அம்மா சிறை!

கண்ணீர்கள் காரணங்கள்
ஏராளம்! ஆனந்தம்
தண்ணளிதன் மானம் தலைப்பிரிவு!
கண்ணகியே
என்கண்ணீர்க் காரணமோ
ஏலாமை! ஆற்ருமை!
சென்றுதிற என்சேய் சிறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் தவறுசெயாள்!
ஆத்தாள் நிறைகுடமே!
நம்பழியே நம்மை நசிப்பதென
நம்பிப்
பழிதீரத் தண்டனைகள்
பாய்ந்தேற்கின் றேனே!
தனைநீக்கி என்மகனைத் தா!

அணுவணுவாய் அல்பகல்நான்
சாகாமற் காப்பாய்
மணிமணியாய்த் தந்தாய்நீ மக்கள்
தணல்தணலாய்ப்
பிள்ளையவன் பீதிமொழி
பிய்த்திடுமென் நெஞ்சிலின்பம்
துள்ளியெழ வெஞ்சிறையைத் தூர்!

அவனுள் அவனுய்
அவனே டவனுய்த்
தவமேஎம் வட்டுவினித் தாயே!
தவறு
துறைந்தவனைத் தாங்கி
உடலுள்ளம் பேணிச்
சிறைமீட்டென் வேதனைகள் தீர்!

''என்னடிய னுயிழுக்க
இவ்வேலை!'' என்றுரைத்த
அன்னுய்! அதுநடந்து விட்டதடி!
சந்நிதியான்
நோன்பு சனிநோன்பு
தானுக நோற்கின்ருன்!
வான்புகழ மீட்டவனை வை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாண்டு கொள்!சேய்
கருத்தில் உருவாழ்வில்
பூத்தாண்டு கொள்ளென்று போற்றியதால்
ஆத்தாளே
வட்டுவினித் தாயுன்
மயமாக்கி னுய்இன்று!
சிட்டவனை நீக்கு சிறை!

''உண்மைத்தாய் உன்சேய்க்
குணர்நானே!'' என்றவளே
பெண்மைக்குள் தாய்மை பெருக்கருளே!
புண்பட்டுப்
பொல்லாச் சிறைவாடுன்
புத்திரனை மீட்டருளல்
எல்லாமுன் பாரம் இனி!

சுபம்

...சிய நூலகப் பிரிவு
...நகர நூலக சேவை
...ழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

KOHA
JPL

128100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு:
ஸ்ரீ வாலாம்பிகா அச்சகம்
423, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org